Website : www.kamakoti.org.
email : kanchimutt@gmail.com

உ

Contact : 044-27222115
Acts : 044-27224236
Cell : 9445421115

II Sri Chandramouleeswaraya Nama: ||
Sri Sankara Bhaghavadpadacharya Paramparagatha Moolamnaya Sarvajnapeeta

His Holiness Sri Kanchi Kamakoti Peetadhipathi

# JAGADGURU SRI SANKARACHARYA SWAMIGAL

## Srimatam Samsthanam

No. 1, Salai Street, Kancheepuram - 631 502, Tamilnadu State, INDIA.

01 – 10 – 2024

சாங்கர சம்வத்சரம்: 2533

யத்ரா ஸ்தானம்: நல்லூர் கிராமம், ஏனாத்தூர், காஞ்சிபுரம் சமீபம்

சுமார் 2500 வருடங்களுக்கு முன்னர் ஸ்ரீஆதிசங்கரர் காஞ்சியில் சர்வக்ஞ பீடமேறி, ஸ்ரீகாஞ்சி காமகோடி பீடம் ஸ்ரீமடத்தை நிறுவி, தாமே அதற்கு முதல் ஆசார்யராக இருந்து அருள்பாலித்த இந்த பீடத்தில், வழி வழியாக பல யோகிகள் பீடத்தை அலகரித்து வந்துள்ளார்கள். அவ்வழியில் 61வது ஆசார்யர்களாக இப்பீடத்தை அலங்கரித்த ஸ்ரீமத் பரமஹம்ஸ பரிவ்ராஜகாசார்ய ஜகத்குரு பூஜ்யஸ்ரீமஹாதேவேந்த்ர சரஸ்வதி சங்கராசார்ய IV ஸ்வாமிகள் அவர்களது ப்ருந்தாவனமானது சென்னை, திருவொற்றியூர், ஸ்ரீத்ரிபுரசுந்தரி சமேத ஸ்ரீத்யாகராஜஸ்வாமி திருக்கோவில் தெற்கு மாட வீதியில் அமைந்துள்ள ஸ்ரீசங்கர மடத்தினுள் உள்ளது. இன்றும் அன்றாடம் அவரின் அருள்நாடிவரும் பக்தர்களுக்கு அனுக்ரஹித்துக் கொண்டிருக்கிறார்.

இந்த ப்ராசீன மடத்தில் மராமத்து வேலைகள் நடைபெறவிருப்பதும், அந்த கைங்கர்யத்தை ஸ்ரீசங்கர பக்த ஜன சபையினர் ஏற்றுக்கொண்டு செய்யவுள்ளனர் என்பதையும் ஸ்ரீஆதிசங்கர பகவத்பாத பரம்பராகத மூலாம்நாய சர்வக்ஞபீடம் ஸ்ரீகாஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு பூஜ்யஸ்ரீ சங்கர விஜயேந்த்ர சரஸ்வதி சங்கராசார்ய ஸ்வாமிகள் அவர்களாகிய பூஜ்யஸ்ரீ மஹாஸன்னிதானம் அவர்களிடம் தெரிவிக்கப்பட்டது. ஸ்ரீசரணர்கள், சபையினரின் முயர்சியைப் பாராட்டி, வடசென்னை வாஸிகளுக்கும் ஸ்ரீகாஞ்சி காமகோடி பீடத்திற்கும் பலநூற்றாண்டுகளாக இருந்துவரும் தொடர்பையும், அவ்வூர்மக்களின் குருபக்தியையும் பற்றி கூறி, இந்த குருகைகர்யத்தில் அனைத்து ஆஸ்திகர்களும் பங்குகொண்டு பூஜ்யஸ்ரீமஹாதேவேந்த்ர சரஸ்வதி சங்கராசார்ய IV ஸ்வாமிகள் அனுக்ரஹத்திற்கும், ஸ்ரீமஹாதிரிபுரசுந்தரி சமேத ஸ்ரீசந்த்ரமௌலீப்வர ஸ்வாமி க்ருபாகடாக்ஷத்திற்கும், ஸ்ரீமதாசார்யாள் அனுக்ரஹத்திற்கும் பாத்திர்களாக வேண்டுமென, ஸ்ரீமஹாஸந்நிதானத்தின் ஆக்ஞைப்படி விக்ஞாபனம் செய்துகொள்கிறோம்.

For Sri Kanchi Kamakoti Peetam
Jagadguru Sri Sankaracharya Swamigal Srimutt

(CHALLA VISWANATHA SASTRY)
Srikaryam & Agent